செ.வெ.எண்.290 நாள்.03.05.2018.

# திருநெல்வேலி சங்கரன்கோவிலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் 106 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பணி நியமன உத்தரவினையும், 4 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பிலான சுழல் நிதிகளையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்–மகளிர் திட்டம் சார்பில் தனியார் வேலைவாய்ப்பு முகாம் இன்று (03.05.2018) நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பணி உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, 106 நபர்களுக்கு பணி நியமன உத்தரவினையும், 4 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பிலான சுழல் நிதிகளையும் வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது–

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு ஏழை, எளிய மக்களுக்கு கைகொடுத்து அவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் அரசாக விளங்கி வருகிறது. வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, வேலை வாய்ப்பினை உருவாக்கிடும் வகையில் இதுபோன்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அரசு வேலைவாய்ப்புகள் குறைவாக இருப்பதாலும், தனியார் துறைகளில், அதிக வேலைவாய்ப்பினை தகுதியுள்ள இளைஞர்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கில் இதுபோன்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இன்று, சங்கரன்கோவிலில் நடைபெற்ற முகாமில் 25 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளது. 450க்கும் மேற்பட்ட பணியிடங்களுக்கு பணியாளர்கள் தேவைப்பட்டுள்ளது. இம்முகாமில் 764 நபர்கள் பங்கேற்றுள்ளனர். 106 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் மூலம் பல்வேறு தொழில்கள் தொடங்கும் வகையில், பல்வேறு தனித்திறன் பயிற்சிகள் மற்றும் கடனுதவிகளும் வழங்கப்படுகிறது. தமிழக அரசின் திட்டங்களை முழுமையாக தெரிந்து கொண்டு, இளைஞர்கள் தனித்திறமைகளை வளர்த்து வேலைவாய்ப்புகளை பெற்று உங்களது பெற்றோர்களுக்கும், குடும்பத்தினர்களுக்கும் உறுதுணையாக திகழ்ந்திட வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்புகளை அளிக்கும் நோக்கத்தில் மத்திய அரசின் மூலம் தீன்தயாள் உபாத்யாய, கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ், தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. தனியார் வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட அளவில் ஏற்கனவே திருநெல்வேலியில் நடத்தப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக இன்று சங்கரன்கோவிலில் நடத்தப்பட்டு 106 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்த்திலுள்ள 19 வட்டாரங்களிலும் தனியார் துறைகள் மூலம் வேலைவாய்ப்புகள் முகாம்கள் நடத்தப்படும். இம்முகாமில், கலந்து கொண்ட இளைஞர்களாகிய நீங்கள் இதை அனுபவமாக எடுத்துக் கொண்டு தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், வீட்டின் அருகிலேயே பணி கிடைக்கும் என்று இருக்காமல் வெளியூரிலும் பணியாற்ற தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். சிறிய பணியாக இருந்தாலும் அந்த பணி அனுபவத்தினை வைத்து, திறமைகளை வளர்த்து உயர் பணியிடங்களுக்கு, உயர் பதவிகளுக்கு செல்ல வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மனோகரன், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, சங்கரன்கோவில் வட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பா.கணபதி, முக்கிய பிரமுகர்கள் திரு.ஆவின் ரமேஷ், திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஆறுமுகம், திரு.வேல்முருகன் மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி